## In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 124/2022 தேதி-26.03.2026

(P.W.1) . கோபகுமார்

**1, 2, 5 மற்றும் 6 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கை பாதை உரிமை கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆவணங்களில் சொல்லியுள்ளபடிதான் வழிப்பாதை அவகாசம் கேட்கிறேன் என்றால் சரிதான். நான் பாதை உரிமை கேட்கும் சொத்தானது எனது முன்னோர்கள் அனுபவித்து வந்த பாதை வசதியின் அடிப்படையில்தான் கேட்கிறேன் என்றால் சரிதான். எனது மகன் 2016 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். 2016 ஆம் ஆண்டிலிருந்து குலசேகரத்திலிருக்கும் அன்னூரில் வசித்து வருகிறேன் என்றால் போய்வந்து இருப்பேன். தற்போது பாதையை அடைத்ததால் செல்லமுடியவில்லை. நான் அன்னூரில்தான் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய குடும்ப அட்டை, ஆதார் அட்டை ஆகியவையும் அன்னூர் முகவரியில்தான்உள்ளது என்றால் சரிதான். எனக்கு சொந்தமான எ பட்டிகை சொத்தில் ஒரு பழமையான வீடு உள்ளது என்றால் சரிதான். அது ஓடு போட்ட கூரை என்றால் சரிதான். தற்போது அது குடியிருக்க முடியாத நிலையில் உள்ளது என்றால் சரிதான்.

அந்த பழைய நிலையில் உள்ள வீட்டினுள் செடிகள் வளர்ந்துள்ளது என்றால் சரிதான். மின்சார இணைப்பு வசதி உள்ளதா என்றால் தற்போதும் உள்ளது. தற்போது மின்சார இணைப்பு வசதி இருப்பதற்கான ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். நான் பி பட்டிகையாக சொல்லும் இடத்தில் தற்போது வழிப்பாதை இல்லை செடிகள் முளைத்து காடுகளாக உள்ளது என்றால் சரிதான். நான் இல்லாத வழிப்பாதையை உண்டு என்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிராதுடன் ஒரு மாதிரி வரைபடம் இணைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தை யார் தயார் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வரைபடத்தை நான் பார்த்திருக்கிறேன். மாதிரி வரைபடத்தில் இருக்கும் வழிப்பாதை உண்மையில் அங்கு இல்லை என்றால் சரியல்ல.

எனது அம்மா, எனது சகோதரர்கள் மற்றும் நானும் சேர்ந்து 3 சென்ட் சொத்தை 1 ஆம் பிரதிவாதியின் தாயாருக்கு விலையாக கொடுத்தோம் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதியின் தாயார் அதன் அருகிலுள்ள சில சொத்துக்களையும் விலையாக வாங்கினார்கள் என்றால் சரிதான். அவ்வாறாக 1 ஆம் பிரதிவாதியின் தாயாருக்கு 15 சென்ட் சொத்து கிடைத்தது என்றால் சரிதான். மேற்படி 15 சென்ட் சொத்தில் ஒரு பழைய வீடு இருந்தது என்றால் சரிதான். அது மிகவும் பழமையான வீடு இடிந்து விழும் நிலையில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி 15 சென்ட் சொத்தை 1 ஆம் பிரதிவாதியின் தாயார் 1 ஆம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்டாக எழுதி வைத்தார் என்றால் சரிதான்.

1 ஆம் பிரதிவாதி கரம் செலுத்தி தனியாக பட்டா எடுத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 15 சென்ட் சொத்தும் ஒரே கண்டமாக உள்ளது என்றால் சரிதான். நான் வழிப்பாதையாக கேட்கக்கூடிய இடம் 15 சென்டிற்கு உள்ளாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி 15 சென்ட்க்குள்ளாக எந்த வழிப்பாதையும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. எனக்கு 15 சென்ட் சொத்தில் எந்த வழிப்பாதை உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல பல வருடங்களாக வழிப்பாதையை உபயோகித்து வருகிறோம். நான் மற்றும் எனது அம்மா மற்றும் சகோதரிகள் பிரதிவாதியின் தாயாருக்கு விலைக்கு கொடுத்த 3 சென்ட் சொத்தின் வடக்கு பக்கம் வழிப்பாதை உள்ளது. வழிப்பாதை போகத்தான் 3 சென்ட் சொத்தை எழுதிக்கொடுத்தோம்.

பிரதிவாதியின் தாயார் அவருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் ஒரு வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நான் படித்துப்பார்க்கவில்லை. 15 சென்டில் இருக்கும் பழைய வீட்டை இடித்து புதிய கட்டிட அடித்தளம் 1 ஆம் பிரதிவாதி அமைத்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் புதிய கட்டிட அடித்தளம் அமைப்பதற்கு தர்க்கம் செய்தேனா என்றால் தர்க்கம் செய்தேன். நான் எந்த தர்க்கமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதிக்கு அவருக்கு உரிமைப்பட்ட 15 சென்ட் சொத்தில் கட்டிடம் கட்ட அவருக்கு எல்லா உரிமையும் உண்டு என்றால் வழிஅவகாசம் போக மீதம் இருக்கும் இடத்தில் கட்டிடம் கட்ட அவர்களுக்கு உரிமை உண்டு. 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதியின் சொத்தின் வடக்கு பக்கம் வழிப்பாதை உண்டு என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. தற்போது சாட்சி வடக்கு பக்கம்

வழிப்பாதை இல்லை என கூறுகிறார்.

நான் வழிப்பாதையாக கூறும் சொத்தில் நானோ எனது முன்னோர்களோ வழிப்பாதையாக ஒருபோதும் உபயோகிக்கவில்லை என்றால் சரியல்ல. இல்லாத பாதையை பிரதிவாதிகள் தடசம் செய்வதாக நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. எ பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் காம்போண்ட் சுவர் உள்ளதா என்றால் கருங்கல் காம்போண்ட் 4 பக்கமும் உள்ளது. மேற்படி காம்போண்டுடன் சேர்ந்து கால்நடை தொழுகை உள்ளது என்றால் சரிதான். மேற்படி காம்போண்டு சுவரின் ஒருபகுதியில் சிமிண்டால் பூசப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கேட் மாட்டக்கூடிய கொண்டி அதில் இருக்கிறதா என்றால் இல்லை. மேற்படி வழியாகத்தான் ஆடு, மாடுகளை கொண்டு செல்வீர்கள் என்றால் மேற்கு பக்கம் 25 அடிக்கு மேலாக பள்ளமாக இருக்கும் அதனால் அதன் வழியாக கொண்டு செல்லமுடியாது.

நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சிமிண்டால் அடைக்கப்பட்ட பகுதியில் ஒரு கேட் இருந்தது அதன் வழியாகத்தான் ஆடு, மாடுகளை கொண்டு செல்வேன் என்றால் சரியல்ல. நான் இல்லாத பாதையை உண்டு என்று கூறி பிரதிவாதிகளை கஷ்டப்படுத்தவேண்டுமென்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u>

எ பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் இருக்கும் காம்போண்ட் சுவரின் மேற்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் வேறு ஒரு நபருடைய சொத்து உள்ளது. அவர் பெயர் தெரியாது. அவர் எனக்கு உறவுக்காரர் அல்லர்.